

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.2.2026) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில், உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வரும் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எச்.ராஜா அவர்களின் உடல்நலம் குறித்து குடும்பத்தினரிடம் கேட்டறிந்தார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.2.2026) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில், உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வரும் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.மாணிக்கம் அவர்களை சந்தித்து, உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

### பொருளாதார ஆய்வறிக்கையை புறக்கணித்து விட்டனர்!

# ஒன்றிய அரசின் பட்ஜெட் முழுத் தோல்வி!

## ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. கருத்து!



சென்னை, பிப். 3– முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம் ஒன்றிய பட்ஜெட் குறித்து கூறியதாவது:–

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும், ஒன்றிய அரசும் பொருளாதார ஆய்வறிக்கையை முழுமையாகப் புறக்கணித்துவிட்டனர். கடன் வாங்குவதிலும் செலவு செய்வதிலும் தவறில்லை. ஆனால், அரசாங்கம் நிதி ஒருங்கிணைப்பைத் தற்போதைய வேகத்தில் அல்லாமல், மிக விரைவாகச் செய்ய வேண்டும். சுமார் ரூ. 88,000 கோடி நிதி ஒதுக்கி 100 நாள் வேலைத் திட்டத்தில் 50 நாள் தான் வேலை வழங்கப்படுகிறது.

தற்போது வெறும் ரூ. 95,000 கோடி நிதி ஒதுக்கி வி.பி. ஜி. ராம் ஜி திட்டத்தில் எப்படி 125 நாட்கள் வேலை வழங்க முடியும். இந்த பட்ஜெட் எங்கே வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது? இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் பற்றி எங்கே கூறுகிறது?

இந்தியாவுக்கு வரும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் ஓட்டம் குறித்த நிச்சயமற்ற நிலை மற்றும் கடந்த பல மாதங்களாகத் தொடரும் வெளிநாட்டுப் பங்கு முதலீடுகளின் வெளியேற்றம் ஆகியவை எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இவ்வாறு ப.சிதம்பரம் எம்.பி. கூறினார்.

### நடப்பாண்டில் தருமபுரி – கிருஷ்ணகிரி – ஈரோடு – சேலம் மாவட்டங்களில்

# கேழ்வரகு கொள்முதல் ஆரம்பம் - ஒரு மெட்ரிக் டன் ரூ.48.860-க்கு விற்கலாம்!

## உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!



சென்னை, பிப்.3 -

நடப்பாண்டில் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் கேழ்வரகு கொள்முதல் நவம்பர் 1-ஆம் தேதி முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அம்மாவட்ட விவசாயிகள் கேழ்வரகினை மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.48,860/ என்ற விலையில் நடப்பு ஆண்டு ஆகஸ்ட் 31 வரை நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்று பயன்பெற உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கேழ்வரகு கொள்முதல் செய்யும் திட்டம், கடந்த 2022-2023 கொள்முதல் பருவத்தில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் முதற்கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, 514 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப் பட்டது.

2023-2024 கொள்முதல் பருவத்தில் கூடுதலாக ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களைச் சேர்த்து, 4 மாவட்டங்களில் விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து நேரடியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1,889 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, கடந்த 2024-2025 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட விவசாயிகளிடமிருந்து 4050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப் பட்டுள்ளது.

இத்திட்டத்தில், நடப்பு 2025-2026 கொள்முதல் பருவத்தில் மெட்ரிக் டன் ஒன்றிற்கு குறைந்த பட்ச ஆதார விலையாக ரூ.48,860/ வழங்கப்படுகிறது. இது கடந்த கொள்முதல் பருவ குறைந்த பட்ச ஆதார விலை ரூ.42,900/ஐ விட மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.5,960/கூடுதலாகும்.

மேலும், நடப்பு 2025-2026 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில் 01.11.2025 முதல் 31.01.2026 வரை தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையம் திறந்து விவசாயிகளிடமிருந்து கேழ்வரகு கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒன்றிய அரசால் அனுமதி வழங்கப்பட்டது.தற்சமயம் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 9 நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதில், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் இதுவரை 630.050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 351சிறு குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், நடப்பு 2025-2026 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில் கேழ்வரகு விவசாயிகள் பயன் பெற ஏதுவாக, கேழ்வரகு கொள்முதல் கால வரம்பு 31.8.2026 வரை நீட்டித்து வழங்க தமிழ்நாடு அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டு, மேற்படி மாவட்டங்களில், நேரடி கேழ்வரகு கொள்முதல் தற்போது, 01.02.2026 முதல் 31.08.2026 வரை கால நீட்டிப்பு செய்து கேழ்வரகு கொள்முதல் செய்ய ஒன்றிய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் தாங்கள் விளைவித்த கேழ்வரகினைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் திறக்கப்படும் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.


